# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.07.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8881/F/2025**

திரு.ராஜேந்திரன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், -- பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
சூளகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி - 635 117.

**ஆணை**

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 14.05.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.கோ.கோகுலகண்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் இன்று (01.07.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திருமதி.கி.வளர்மதி, முன்னாள் வட்டாட்சியர், சூளகிரி வட்டம், தற்போது தனிவட்டாட்சியர் (ச.பா.தி), ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.ந.செந்தில், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.செ.சந்தோஷ்குமார், வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தினை இவ்வாணையம் பரிசீலனை செய்ததன் அடிப்படையில் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.ந.செந்தில்,

தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினை ஏற்கிறது.

2. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ***திரு.செ.சந்தோஷ்குமார், வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை.*** எனவே அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது:-

- மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 27.01.2025 நாளிட்டு தாக்கல் செய்துள்ள மனுவினை, பிரிவு 6(3)-ன்கீழ் 07.02.2025 அன்று பெற்று உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் *அலுவலர்* ***திரு.செ.சந்தோஷ்குமார், வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/. (ரூபாய் இரண்டாயிரம்) இழப்பீட்டு தொகையை மனுதாரருக்கு வழங்க இவ்வாணையம் உத்தரவிடுகிறது. மேற்கண்ட இழப்பீட்டு தொகையை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான சான்றின் நகலினை 06.08.2026 அன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.***

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 8881/F/2025**
**பெறுநர்**
பொது அதிகார அமைப்பு

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
   **வட்டாட்சியர் அலுவலகம்,**
   **சூளகிரி வட்டம்,**
   **கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 117.**

2. **அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் /**
   **வட்டாட்சியர்,**
   **வட்டாட்சியர் அலுவலகம்,**
   **சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.**
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

3. **திரு.செ.சந்தோஷ்குமார்,**
   **அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் /**
   வட்ட துணை ஆய்வாளர்,
   **வட்டாட்சியர் அலுவலகம்,**
   **சூளகிரி வட்டம்**, கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

4. **திரு.ந.செந்தில்**
   **அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் /**
   தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
   **வட்டாட்சியர் அலுவலகம்,**
   **சூளகிரி வட்டம்**, கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**

திரு.P.ராஜேந்திரன்,
த/பெ.பெருமாள்,
க.எண். M-590, 1-வது மெயின்ரோடு,
தமிழ்வாடு வீட்டுவசதி வாரியம் (அட்கோ)
இராயக்கோட்டை அட்கோ, ஓசூர்,
கிருஷ்ணகிரி - 635 109.

**நகல்**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/PA